தமிழ்நாடு அரசு

**சுருக்கம்.**

சொத்துவரி - நகராட்சிகள் மற்றும் நகராட்சி நகரியங்கள் - முன்னாள் ராணுவத்தினர் குடியிருக்கும் வீடுகள் - சொத்து வரியிலிருந்து விலக்களிக்க - கோரிக்கை - நிராகரிக்கப்படுகிறது.

- - - - - - - - - - - - - - - - - - - - - - - -

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை

அரசாணை (வாலாயம்) எண். 503 நாள். 9.7.'87.

படிக்கப்பட்டது.

1. திருநெல்வேலி - கட்டபொம்மன் மாவட்டத்தைச் சேர்ந்த சங்கரன்கோவில் வட்டம் முன்னாள் ராணுவத்தினர் பென்சனர்கள் சங்கத்தின் செயலாளரின் கடிதங்கள் நாள். 8.7.85 மற்றும் 6.3.87.
2. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை கடிதங்கள் ஓ.மு. 83263/85/ஆர், நாள். 10.12.86 மற்றும் ஓ.மு. 26791/87 நாள். 4.5.'87.

......

**ஆணை:**

முன்னாள் ராணுவத்தினர் மற்றும் அவர்களுடைய வாரிசுகள் குடியிருந்து வரும் வீடுகளுக்கு சொத்துவரியிலிருந்து விலக்கு அளிக்க திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் உள்ள சங்கரன்கோவில் வட்டம் முன்னாள் ராணுவத்தினர் பென்சனர்கள் சங்கத்தின் செயலாளர், அரசுக்கு கோரிக்கை அனுப்பியுள்ளார்.

2. 1920-ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 83(1)-ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளபொது உபயோகத்திற்கான கட்டிடங்கள் மற்றும் நிலங்களுக்கு சொத்து வரிவிதிப்பிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி பிரிவில் குறிப்பிட்ட தனி நபர்கள் அல்லது குறிப்பிட்ட பொது மக்களுக்கு, நகராட்சி சொத்துவரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கப்படவில்லை.

3. எனினும், முன்னாள் ராணுவத்தினர் குடியிருந்து வரும் வீடுகளுக்கு நகர்மன்றங்கள் மற்றும் நகராட்சி நகரியக் குழுக்கள் விதிக்கும் சொத்து வரியிலிருந்து விலக்கு அளிப்பது பற்றிய கோரிக்கையை நகராட்சி நிர்வாக இயக்குநருடன் கலந்து அரசு கவனமாக பரிசீலனை செய்தது. நகராட்சிகளின் நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு மேற்படி கோரிக்கையை அரசு ஏற்று கொள்ள இயலவில்லை. ஆகவே மேற்படி கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஒம்/- ரா.ஆ. சீதாராமதாசன்,
சிறப்பு ஆணையாளர் மற்றும் அரசு செயலாளர்.

/உண்மை நகல்/

ஆ.கோ.எண். 13/64952/87/ஓ1 ஆராய்வாளர் அலுவலகம்,
நாள். 27.7.1987. சென்னை-2.

நகல் அனைத்து சார்நிலை அலுவலர்களுக்கும் (பட்டியல் முன்றின்படி)

ஒம்/- ஏ. என்.ராமன்,
உதவி ஆராய்வாளர். (ந.ஓ.)

நகல்: ஓ1 - ஓ9.

/உண்மை நகல்/

கண்காணிப்பாளர்
19/8/87

சா. 17/8